## கள்ளக்குறிச்சியில் கள்ளச்சாராயச் சம்பவம்: முதல்வரின் அறிவிப்பிற்கிணங்க

# உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ.10 லட்சம் நிதி!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேரில் வழங்கினார்!

**சென்னை, ஜூன் 22-**

**இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20-06-2024) கள்ளக்குறிச்சி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மெத்தனால் அருந்தி சிகிச்சை பெற்று வரும் நபர்களை நேரில் பார்வையிட்டு ஆறுதல் கூறி அவர்களுக்கு வழங்கப்படும் மருத்துவ சேவைகள் குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்தார்.**

அப்போது பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறை முகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை அரசு செயலர் திருமதி. கே.அமுதா, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அரசு செயலாளர் பிரதீப் யாதவ், சிறப்பு திட்ட செயலாக்க அரசு செயலாளர் மரு.தரேஷ் அகமது, தமிழ்நாடு சுகாதார திட்ட இயக்குநர் ம.கோவிந்த ராவ், மாவட்ட ஆட்சியர் எம்.எஸ். பிரசாந்த், கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன், ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினர் வசந்தம். க.கார்த்திகேயன், சங்கராபுரம் சட்டமன்ற உறுப்பினர் தா.உதயசூரியன் ஆகியோர் உடனிருந்தனர்.



**உடனடி நடவடிக்கை!**

கள்ளக்குறிச்சி மாவட்டம், கருணாபுரத்தில் 19.06.2024 அன்று மெத்தனால் அருந்திய நபர்கள் தொடர்ந்து கள்ளக்குறிச்சி அரசு மருத்துவமனையில் உடல்நலக் குறைவால் அனுமதிக்கப்பட்டனர். அவர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய அறிவுறுத்தலுக்கிணங்க, உயர்தர மருத்துவ சிகிச்சைகள் வழங்கப்பட்டது. மருத்துவர்களின் பரிந்துரையின் பெயரில் சில நபர்கள் மேல்சிகிச்சைக்காக சேலம், விழுப்புரம், பாண்டிச்சேரி மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டு, சிகிச்சை மேற்கொள்ளப்பட்டன. இதில், எதிர்பாராத விதமாக சிகிச்சை பலனின்றி இறந்த நபர்களுக்கு உடற்கூராய்வு உடனடியாக மேற்கொள்ளப்பட்டு உறவினர்களிடம் உடல்கள் ஒப்படைக்கப்பட்டது.

**உயிரிழந்தவர்களின் இல்லங்களுக்கு நேரில் சென்றார்!**

மேலும், இம்மாவட்டத்தின் பொறுப்பு அமைச்சர் பொதுப்பணித் துறை அமைச்சர் மற்றும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் ஆகியோர் சம்பவம் நடைபெற்ற உடனே மருத்துவமனைக்கு வருகை புரிந்து, சிகிச்சை பெற்று வரும் நபர்களுக்கு மருத்துவ உதவிகள், கூடுதல் மருத்துவர்கள், போதிய மருந்துகள் இருப்பதை உறுதி செய்துள்ளனர். தொடர்ந்து, சிகிச்சையில் இருப்பவர்கள் மருத்துவ குழுக்களால் கண்காணிக்கப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது. தொடர்ந்து, கருணாபுரத்தில், சிகிச்சை பலனின்றி உயிர் இழந்த நபர்களின் இல்லத்திற்குச் சென்று அவர்களது உடலிற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். மேலும், உயிரிழந்த நபர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு ஆறுதல் தெரிவித்தார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட தலா ரூ.10 இலட்சம் நிவாரண உதவித்தொகையினை உயிரிழந்தவர்களின் 27 குடும்பத்தினரிடம் நேரில் வழங்கினார்கள்.

இந்நிகழ்வில், மருத்துவக் கல்வி இயக்குநர் மரு.சங்குமணி, மாவட்ட வருவாய் அலுவலர் திரு.நா.சத்திய நாராயணன், மாவட்ட ஊராட்சிக் குழு தலைவர் திருமதி.புவனேஷ்வரி பெருமாள், கள்ளக்குறிச்சி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் (பொ) மரு.நேரு, இணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) (பொ) மரு.செந்தில்குமார், துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) மரு. ராஜா உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

---

# வள்ளுவர் கோட்டம் புனரமைப்புப் பணிகள்!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேரில் ஆய்வு!

*சென்னை, ஜூன் 22-*

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணைப்படி 2023-2024 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கையின்போது தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்கள்,

“உலகப் பொதுமறை தந்த அய்யன் திருவள்ளுவர் புகழினை உலகெங்கிலும் கொண்டு செல்ல வள்ளுவர் கோட்டம் 1976ஆம் ஆண்டு திறக்கப்பட்டது. கலையழகும், கம்பீரமும் கொண்டு சென்னையின் முக்கிய அடையாளங்களில் ஒன்றாகத் திகழும் சென்னை வள்ளுவர் கோட்டத்தில் புனரமைப்புப் பணிகள் சுமார் ரூ.80 கோடி மதிப்பீட்டில் உலகத்தரம் வாய்ந்த அளவில் மேற்கொள்ளப்படும்” என அறிவித்தார்கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் வள்ளுவர் கோட்டம், வடிவமைக்கப்பட்டு 18.9.1974 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு, கட்டி முடிக்கப்பட்டபின் 15.4.1976 அன்று திறந்து வைக்கப்பட்டது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் வடிவமைக்கப்பட்டு உலக மக்களின் கவனத்தை ஈர்க்கும் வண்ணம் கலை நுணுக்கத்தோடு ஆசியாவிலேயே மிகப்பெரியதாக, நடுவில் தூணே இல்லாத அரங்கத்துடன், திருவாரூர் தேரையே சென்னை மாநகருக்குக் கொண்டு வந்ததுபோல் சிற்பத்தேர் உருவாக்கப்பட்டு அதனை வள்ளுவர் கோட்டத்தின் மணி முடியாய் நிர்மாணித்துக் காண்போரைக் கவரும் வண்ணம் கட்டப்பட்டுள்ளது.

அய்யன் திருவள்ளுவரின் புகழ்போற்றும் இந்த மாபெரும் கலைச் சின்னமாகிய வள்ளுவர் கோட்டத்தில் உள்ள அரங்கத்தையும், பூங்காவையும், பராமரிக்கவும், தேர், கோபுரம், கலசம், திருவள்ளுவர் சிலை ஆகியவைகளின் நிழல் உருவம் தெரியும் வண்ணம் அமையப் பெற்றிருக்கும் நீர் நிலைகளைப் பராமரிக்கவும், கோட்டம் ஒளிமிக்கதாக என்றென்றும் திகழவும், பார்வையாளர்கள் அமர்ந்து கண்டுகளிக்கவும், சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைப் பல மடங்கு உயர்த்தவும் வள்ளுவர் கோட்டத்தினைக் காலச் சூழலுக்கு ஏற்றவாறும், மேம்பட்ட தொழில்நுட்ப வசதிகளுடனும் கலையம்சம் மாறாமல் புனரமைத்திடவும் 80 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து 13.7.2023 அன்று அரசாணை பிறப்பிக்கப்பட்டது. அந்த அரசாணைப்படி அய்யன் வள்ளுவர் கோட்டத்தில் புனரமைப்புப் பணிகள், புதிய கட்டுமானப் பணிகள், கூடுதல் பொழுதுபோக்கு வசதிகள் ஏற்படுத்துதல் ஆகியவற்றுடன் நடைபெற்றுவரும் புனரமைப்புப் பணிகளை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு. பெ.சாமிநாதன், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் ஜெயகர் முன்னிலையில் ஆய்வு செய்து பணிகளை விரைந்து முடிக்குமாறு அறிவுரைகள் வழங்கினார்கள். இந்த ஆய்வின்போது செய்தித்துறை கூடுதல் இயக்குநர் எஸ்.செல்வராஜ், இணை இயக்குநர் கு.தமிழ்செல்வராஜன் ஆகியோர் உடன் இருந்தனர்.

---

### விக்கிரவாண்டி இடைத் தேர்தலில் பணியாற்றிட

# கழகத் தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் - ஒருங்கிணைப்பாளர்கள் நியமனம்!

### அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா அறிவிப்பு!

DMK IT WING

கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி இடைத்தேரதல் பணியில் தலைமைக் கழகத்தால் அமைக்கப்பட்டுள்ள தேர்தல் பணிக்குழுவுடன் இணைந்து கழகத் தகவல் தொழில்நுட்ப அணியின் சார்பில் கீழ்க்காணும் நிர்வாகிகள் ஒருங்கிணைப்பாளர்களாகப் பணியாற்றுவார்கள்.

தகவல் தொழில்நுட்ப அணி விக்கிரவாண்டி இடைத்தேர்தல் ஒருங்கிணைப்பாளர்கள்

| வ.எண் | ஒன்றியம் / பேரூர் | தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர்கள் |
|---|---|---|
| 1 | விக்கிரவாண்டி தொகுதி | திரு. அ.தமிழ்மாறன்<br>மாநிலத் துணை செயலாளர் |
| 2 | கானை மத்தியம் ஒன்றியம் | திரு. AK தருண்<br>மாநிலத் துணை செயலாளர் |
| 3 | கானை வடக்கு ஒன்றியம் | திரு. AK தருண்<br>மாநிலத் துணை செயலாளர் |
| 4 | கானை தெற்கு ஒன்றியம் | திரு. AK தருண்<br>மாநிலத் துணை செயலாளர் |
| 5 | விக்கிரவாண்டி கிழக்கு ஒன்றியம் | திரு. SD.இசை<br>மாநிலத் துணை செயலாளர் |
| 6 | விக்கிரவாண்டி மேற்கு ஒன்றியம் | திரு. SD.இசை<br>மாநிலத் துணை செயலாளர் |
| 7 | விக்கிரவாண்டி மத்தியம் ஒன்றியம் | திரு. SD.இசை<br>மாநிலத் துணை செயலாளர் |
| 8 | கோலியனூர் மேற்கு ஒன்றியம் | திரு. விஜயகதிரவன்<br>மாநிலத் துணை செயலாளர்<br>திரு.ஸ்ரீதர்<br>மண்டல பொறுப்பாளர் |
| 9 | விக்கிரவாண்டி பேரூர் | திரு. மதுரை எஸ்.பாலா<br>மாநிலத் துணை செயலாளர் |

வார் ரூம் மற்றும் தலைமை கழகத் தொடர்பு: திரு. அழகிரி சதாசிவம் மாநிலத் துணை செயலாளர்
மகளிர் ஒருங்கிணைப்பு : திருமதி.பத்மப்பிரியா மாநிலத் துணை செயலாளர்
சமூக வலைத்தள ஒருங்கிணைப்பு : திரு. MK.சிவா மாநிலத் துணை செயலாளர்

"அண்ணா அறிவாலயம்"
சென்னை
நாள்- 20.06.2024

**முனைவர் டி.ஆர்.பி.ராஜா**
செயலாளர்
தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி



அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினராக வெற்றி பெற்று நன்றி தெரிவிக்க அரக்கோணம் நகரத்திற்கு வருகை தந்த எஸ்.ஜெகத்ரட்சகனுக்கு அரக்கோணம் நகர கழக செயலாளர் வி.எல்.ஜோதி சால்வை அணிவித்து வரவேற்பளித்தார். இதில் மு.கண்ணையன் என்.ராஜ்குமார் லட்சுமி பாரி,நகர மன்ற தலைவர் ஆர்.தமிழ்ச்செல்வன் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர்.ராஜ்குமார், காங்கிரஸ் பார்த்தசாரதி, கோ.வ.தமிழ்வாணன் மற்றும் நகர துணை செயலாளர் எஸ்.ரமேஷ்பாபு, நகர பொருளாளர் மாவட்ட. பிரதிநிதிகள் ஆர்.கே.லிங்கம், எ.தமின் அன்சாரி,வி.பாலகிருஷ்ணன், மாவட்ட நிர்வாகிகள் எம்..கே.சிவா, எஸ். சரவணன், எஸ்.பிரசாத்,எஸ்.பி.மாலின், ஜி.ஜன்னிஸ்குமார், எஸ்.பிரகாஷ்,கே.எம்.பீ.பாபு, டி.அந்தோணி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

---

### சிவகங்கை மாவட்டம்

# கண்டதேவியில் 17 ஆண்டுகளுக்குப் பிறகு தேரோட்டம்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பங்கேற்பு

*சிவகங்கை. ஜுன் 22-*

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை தாலுகா கண்டதேவியில் சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தானம் நிர்வாகத்திற்கு உட்பட்ட பெரியநாயகிஅம்மன் சமேத சொர்ணமூர்த்தி கோவில் உள்ளது. இந்த கோயிலில் கடந்த 17 ஆண்டுகளாக தேரோட்டம் நடைபெறாமல் உள்ளது . இந்நிலையில் நீதிமன்ற உத்தரவின் பேரில் புதிய தேர் வெள்ளோட்டம் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து 17 ஆண்டுகளுக்கு பிறகு நேற்று 21ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 6.30மணிக்கு மேல் தேரோட்டம் நடைபெற்றது.

இந்த தேரோட்டத்தில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர். பெரிய கருப்பன், தென் மண்டல ஐஜி .கண்ணன், மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷா அஜித் , ராமநாதபுரம் சரக டி.ஐ.ஜி.எம். துரை,மாவட்ட காவல் கண்காணிப் பாளர் பிரவீன் டோங் கரேஉமேஷ், தேவகோட்டை கோட்டாட்சியர் பால்துரை சிவகங்கை ராணி மதுராந்தகிநாச்சியார் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

தேரோட்டம் முடிந்ததும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் செய்தியாளர்களிடம் கூறியதாவது.

திருவாரூரில் ஓடாத ஆழித்தேரை ஓடவைத்தவர் தலைவர் கலைஞர் என்ற பெருமைக்குரியவராக திகழ்ந்தார். அவர் வழியில் 17 ஆண்டுகளுக்கு பிறகு சிவகங்கை மாவட்டம் கண்ட தேவியில் 17 ஆண்டுகளாக ஓடாத தேரின் தேரோட்டம் முதல்வர் ஸ்டாலின் அவர்கள் ஆட்சியில் நேற்று சிறப்பாக தேரோட்டம் நடைபெற்றது. இதற்காக ஒத்துழைத்த அனைத்து பொதுமக்கள், கிராம மக்கள், வருவாய் துறை இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை , காவல்துறை மற்றும் அனைத்து த்துறை அதிகாரிகள், அலுவலர்களுக்கு முதல்வர் அவர்கள் சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். 2006வது ஆண்டில் தலைவர் கலைஞர் முதல்வராக இருந்த பொழுது கண்டதேவியில் தேரோட்டம் நடைபெற்றது . அதன்பிறகு 2007 முதல் முதல் தேரோட்டம் நடைபெறவில்லை . தற்பொழுது 17 ஆண்டுகளுக்கு பிறகு முதல்வர் தளபதி ஸ்டாலின் ஆலோசனை யின் பேரில் நேற்று தேரோட்டம் சிறப்பாக நடைபெற்றுள்ளது.

இவ்வாறு அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் கூறினார். பேட்டியின் போது மாவட்ட கவுன்சிலர் நாகனி செந்தில்குமார் உடன் இருந்தார்.


**பெருநகர சென்னை மாநகராட்சி**
**பேருந்து சாலைகள் துறை**

கோப்பு எண் : பே.சா.து.ந.க.எண்.பி4/1200/2024

**ஒப்பந்தப்புள்ளி ரத்து அறிவிப்பு**

முரசொலி நாளிதழில் - 14.06.2024 மற்றும் Deccan Chronicle - 14.06.2024 அன்று வெளியிடப்பட்ட கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளி நிர்வாக நலன் கருதி ரத்து செய்யப்படுகிறது.

| வ.எண் | கோப்பு எண் மற்றும் பணியின் விவரம் | பணியின் தோராய மதிப்பு (ரூ) இலட்சம் |
|---|---|---|
| 1 | பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் - 3 (மாதவரம்) கனரக மற்றும் இலகுரக வாகன நிறுத்த முனையம், சாலைகள், நிர்வாக மற்றும் பல்நோக்கு கட்டிடங்கள் மேம்படுத்தும் பணிக்கு (சிப்பம் 1 முதல் 11 வரை | குறைந்தபட்சம் ரூ.2.89 கோடி<br>அதிகபட்சம் ரூ.3.43 கோடி |

மேலே பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளுக்கு 18.07.24 தேதியில் கோரப்பட்ட திறந்த வெளி மின்னணு ஒப்பம் நிர்வாக நலன் கருதி ரத்து செய்யப்படுகிறது.

செ.ம.தொ.இ / 2031 / ஒப்பந்தப்புள்ளி / 2024

கண்காணிப்பு பொறியாளர் / பே.சா.து


## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### இராம. நாராயணன்
### ஜூன் 22 (2014)



**கழகக் கொள்கைகளில் ஈடுபாடு கொண்ட காரணத்தால், கழகம் ஆட்சிப் பொறுப்பில் இல்லாத காலத்திலும், பல்வேறு எதிர்ப்புகள், நெருக்கடிகள் இருந்தபோதும், கழக கொள்கைகளை தனது திரைப்படங்கள் மூலம் மக்களிடம் கொண்டு சேர்த்தவர்.**

**1989ஆம் ஆண்டு காரைக்குடி சட்டமன்றத் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு, வெற்றி பெற்று அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**தனது வாழ்நாளின் ஆரம்பம் முதல் இறுதி வரை கழகத்தின்பால் முழுஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**